1970 மார்ச் 30]

திரு. எஸ். முருகையன் : மாடி பஸ்ஸில் பிரயாணம் செய்ய மக்கள் சற்று பயப்படுகிறார்கள். வசதி குறைவாக இருக்கிறது. மாடி பஸ்களைத் தனியார் துறையில்போல் 64 பாசஞ்சர்கள் உட்காரும் அளவில் அரசாங்கப் பஸ்களிலும் வசதி செய்து கொடுத்து, பிரயாணிகளுக்கு வசதியாகச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாடி பஸ்களில் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வருமானம் குறையவில்லை. மக்களால் வரவேற்கப்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த தொலைதூர எக்ஸ்பிரஸ் பஸ், மாடி பஸ்களில், முக்கியமாக பயணம் செய்கிறவர்களுக்கு, அதிக வசதிகளைப் பெருக்கித் தருவதற்கு, பஸ் துறை ஒழுங்காக இயங்குவதற்கு, இந்தத் துறையில் மாடி பஸ்ஸின் வசதிக்குறைவான பிரயாண அமைப்பை இப்படி அமைத்துத் தந்த அதிகாரிகள், இன்னும் சம்பந்தப்பட்டவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா: நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. குறைபாடுகளை நிவர்த்திக்க கடமைப்பட்டிருக்கிறோம். நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. வேறு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவேண்டிய நிலை இல்லை.

திருப்பூரிலிருந்து பேருந்து பணிகள்.

*604 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களிடமிருந்து, அரசு பஸ்கள் விடுவதுபற்றி 1967-ம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) விரிவான ஆய்வு நடத்தியபின் இவ்வழித்தடங்களில் பேருந்துகள் கிடைப்பதைப் பொறுத்து, பேருந்துப் பணியினைத் / தொடங்க நடவடிக்கை எடுக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கிடையில் அரசு உடைமையாக்கப்பட்ட ''திருச்சி-காங்கேயம்'' வழித்தடத்தைத் திருப்பூர்வரை நீடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குளச்சல் துறைமுகம்.

*585 வினா.—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) குளச்சல் துறைமுக வளர்ச்சிக்காக 16 லட்சம் ரூபாயில் திட்டம் வகுத்து அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றது. ஒரு பாலம் கட்டுவதற்கு ரூ. 15 லட்சமும், துறைமுக அலுவலகம் கட்டுவதற்கு 50 ஆயிரம் ரூபாயும், அதையொட்டி ஒரு கிடங்கு (கார்கோ ஷெட்) கட்டுவதற்கு 50 ஆயிரம் ரூபாயும் செலவிடத் திட்டமிடப்பட்டு, பாலத்திற்கு 2 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழகத்தின் ஏதாவது ஒரு துறைமுக வளர்ச்சிக்குமட்டுமே உதவ

முற்பகல் 9-30